தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 22, பவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, ஏப்ரல் 5, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணத்தையும் ஆராய்ந்து அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து உடலுக்கு ஏற்றவாறு சிகிச்சை அளித்தலே நல்ல சிகிச்சை முறையாகும்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அந்த வகையில் அளித்தால் சரி.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 221, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

221—

காட்டுமன்னார் கோயில் வட்டாட்சியர் அலுவலகத்தை மாற்றுதல்

*9380—**திரு. என். ஆர். ராஜேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1995 ஏப்ரல் 5

தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், காட்டுமன்னார் கோயிலில் இடப்பற்றாக்குறையை போக்க வட்டாட்சியர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தாலுக்கா அலுவலகம் இயங்கி வருகின்ற அந்த கட்டிடம் மிகப் பழமையான கட்டிடம். அந்தக் காலத்திலே ஜனத்தொகை மிகக் குறைவாக இருந்த நேரத்திலே, அந்த கட்டிடத்தில் போலீஸ் ஸ்டேஷனும் தாலுக்கா அலுவலகமும் ஒன்றாக வைத்து இருந்தார்கள். அப்போதெல்லாம் வராண்டா இருந்த பகுதியெல்லாம் இப்போது அலுவலகங்களாக மாற்றப்பட்டு அது 1982 ஆம் ஆண்டு தனித் தாலுக்காவாக பிரிக்கப்பட்டு அலுவலகங்கள் கூடிவிட்டது. ஆனால் இப்போது ஜனநெருக்கம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார் எதுவும் நிறுத்தமுடியாத சூழ்நிலையிலே உள்ளது. ஒரு ஜீப்புக்கு மேல் இரண்டு ஜீப்புகள் வந்தாலும்கூட அங்கே நிறுத்த முடியாது. ஆக ஏதாவது பஞ்சாயத்து, ஒரு பீஸ் கமிட்டி கூட்டம் போடுவது என்றாலும் அங்கே இடம் இல்லை. அப்படி நெருக்கமான சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தினால் அதை மாற்றி வேறு இடத்திற்கு ஒரு புதிய கட்டிடம் கட்டித் தந்தால் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் இருக்கும். ஆகவே இது மறு பரிசீலனை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி இடம் போதவில்லை என்பது உண்மைதான். ஆனால் அந்த கட்டிடம் துணை வட்ட ஆட்சி அலவலகமாக இருந்தது. அதற்குப் பிறகு இன்றைக்கு வட்ட ஆட்சி அலுவலகமாக ஆகியிருக்கிறது. 68 பேர் அங்கே பணிபுரிகின்றார்கள். அதற்கு வேண்டிய இடம் போதாது என்பது இன்றைக்கு கணக்கிடப்பட்டு அதை மேலும் ஒரு கட்டிடம் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்துகொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திலே வேறு கட்டிடம் கட்டுவதற்கு இடமில்லை

1995 ஏப்ரல் 5]

என்பது எனக்குத் தெரியும். ஆகவே புதிய இடம் வாங்கி அங்கே கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து குறிப்புகளை கேட்டிருக்கிறேன். அங்கேயிருந்து வந்த குறிப்பில் கட்டிடம் அங்கே வேறு கட்டிடம் கட்டுவதற்காகத்தான் குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி அங்கே இடமே இல்லை வேறு கட்டிடம் கட்ட முடியாது என்றால் அதைப் பற்றி இந்த அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *222*, திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

222—

கங்கனாஞ்சேரி வழியாக கும்பகோணத்திற்குப் பேருந்து இயக்குதல்

20010*—திரு. வே. தம்புசாமி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினத்திலிருந்து நாகூர், கங்கனாஞ்சேரி வழியாக கும்பகோணத்திற்கு சோழன் போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை தடத்தில் கங்கனாஞ்சேரியிலிருந்து நாகூர் வரையிலான சாலைப்பகுதி செப்பனிடப்பட்டு வருகிறது. அச்சாலை பேருந்து இயக்கத்திற்குத் தகுதி வாய்ந்ததாக செப்பனிடப்பட்ட பிறகு கோரிக்கை தடத்தில் நேரடிப் பேருந்து இயக்குவதற்கான நடவடிக்கை சோழன் போக்குவரத்துக் கழகம் எடுக்கும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூர், கங்கனாஞ்சேரி வழியாக கும்பகோணம் சென்று இருந்த பஸ், அந்த பகுதி சாதாரண மக்களைக் கொண்டிருக்கின்ற பகுதி, நாகூரிலிருந்து கூட கும்பகோணத்திற்கும், அதையொட்டி இருக்கின்ற கிராமங்களில் இருந்தும் கும்பகோணம் கல்லூரிக்கு, கும்பகோணம் நகருக்கு நேர் வழியில் சென்று கொண்டிருந்தார்கள். அந்த பஸ் சாலைப் போக்குவரத்து சரியில்லை என்று ஓராண்டுக் காலமாக நிறுத்தப்பட்டு விட்ட்து.